வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 18.09.2024 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிகளில், பெண்களின் பங்கேற்பு அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

பூவுலகை பாதுகாக்க, புரட்சிகரமான மாற்றங்களும், கூட்டு முயற்சிகளும் தேவை என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல் என்னும் கருத்தை ஆராய்ந்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

புதுச்சேரியில் இன்று, இண்டியா கூட்டணியின் பந்த் போராட்டம் காரணமாக, பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு இருந்தன. பெரும்பாலான பொதுப் போக்குவரத்து வாகனங்கள் ஓடவில்லை.

----------------------------

*முர்மு-ஜெய்பூர் 1 (18)*

ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிகளில், பெண்களின் அதிக பங்கேற்பு, நாட்டின் பொருளாதார, மற்றும், கலாச்சார மேம்பாட்டிற்கு மட்டுமின்றி, பெண்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும் மிக அவசியம் என்று, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார். இன்று ஜெய்பூரில் உள்ள மாளவியா என்ஐடி-உயர்கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றிய அவர், பெண்களுக்கு சம வாய்ப்பு

வழங்கினால், பெண்கள் இன்னும் சிறக்க முடியும் என்றார். நாட்டில் உயர் கல்வியில் சேரும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, மகழ்ச்சிக்கு உரியது என்றும் அவர் குறிப்பிட்டார்.

2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக மேம்படும் இலக்குடன் இந்தியா முன்னேறி வரும் நிலையில், வளர்ச்சிக்கான தலைமைத்துவத்தை வழங்கும் கடமை மாணவர்களுக்கு இருப்பதாக குடியரசுத் தலைவர் கூறினார். மாணவர்கள் தங்களின் அறிவுத் திறன், மற்றும், வலுவான அர்ப்பணிப்பு மூலம், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க முன்வர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். மாணவர்களின் இலட்சியங்கள், நாட்டின் தேவைகளுக்கு ஏற்றதாக அமைய வேண்டும் என்றும், நாடு மற்றும் சமூகத்தின் மேம்பாட்டிற்கு வழிகோலும் வகையில், மாணவர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முர்மு-ஜெய்பூர் 2 (10)

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களின் மாணவர்கள், நாட்டிற்கே முதலிடம் என்னும் உணர்வுடன் செயல்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு, இயல்பானதே என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார். இதற்கேற்ற முயற்சிகளை, மாணவர்கள் தங்களின் சொந்த வாழ்வில் மேற்கொள்ள வேண்டும் என்றும், சுற்றுச் சூழலுக்கு கேடு ஏற்படுத்தாத விதத்தில் இம்முயற்சிகள் அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார். சுற்றுச் சூழலை பாதுகாக்க, புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

ராஜஸ்தான் மாநில ஆளுநர் திரு. ஹரிபாவ் பாகடே, முதலமைச்சர் திரு. பஜன்லால் ஷர்மா உள்ளிட்டோர், இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

-----------------------------

ஜெக்தீப் தன்கர் 1 (15)

எதிர்காலத் தலைமுறையினருக்காக பூவுலகை பாதுகாக்க, புரட்சிகரமான மாற்றங்களும், அனைத்து தரப்பினரின் கூட்டு முயற்சிகளும் தேவை என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில், முதலீடுகளை ஈர்ப்பதற்கான **ரீ-இன்வெஸ்ட்** உலக மாநாட்டின் நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், இந்தியா, மேலும், வளர்ச்சி அடைந்து வருவதாகவும், நாட்டில், புரட்சிகரமான மாற்றங்கள், அடித்தட்டு நிலை வரை சென்றடைந்து இருப்பதாகவும், அவர் குறிப்பிட்டார்.

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க, இந்தியா மேற்கொண்டு வரும் விரிவான முயற்சிகள், பாராட்டத்தக்கவை என்று குடியரசுத் துணைத் தலைவர் கூறினார். அதேசமயம், இதற்கு இன்னும் பல புதுமைப் படைப்புகள் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

மாற்றத்தின் மையப் புள்ளியே இளைஞர்கள்தான் என்று குடியரசுத் துணைத் தலைவர் கூறினார். குறிப்பாக, புதுப்பிக்கவல்ல எரிசக்தித்

ஜெக்தீப் தன்கர் 2 (6)

துறையில், இளைஞர்களுக்கு பல வாய்ப்புகள் இருப்பதால், இளைஞர்கள் அதிக அளவில் இத்துறையில் இணைந்து, பூவுலகை பாதுகாப்பதற்கான அரசின் முயற்சிகளில் கை கோர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

புதிய, மற்றும், புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய அமைசசா் திரு. பிரல்ஹாத் ஜோஷி, குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

-----------------------------

100 *நாள் சாதனை 1 (18)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, தனது, 3அவது பதவிக் காலத்தின் முதல் 100 நாட்களிலேயே, சாலை, ரயில்வே, துறைமுகம், மற்றும், வான்வழிப் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் வகையிலான, 3 லட்சம் கோடி ரூபாய் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் 900 கிலோ மீட்டர் நீளத்திற்கு, **உயர்வேக சாலை நெடும்பாதை** அமைப்பதற்கான 8 திட்டங்களும் இதில் அடங்கும். பொருளாதார வளர்ச்சி, மற்றும், சுற்றுச் சூழல் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, வேலை வாய்ப்புகளை பெருக்கும் வகையில், **உயிரி-உற்பத்தித்** துறையை வலுப்படுத்த, **பயோ-E3 கொள்கையும்** கொண்டு வரப்பட்டுள்ளது. உலக அளவிலான உற்பத்திக் கேந்திரமாக இந்தியாவை மேம்படுத்தும் நோக்கத்தின் ஒருபகுதியாக, மொத்தம் 28 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பில், 12 **தொழில் தொகுப்புகளை** உருவாக்கவும், அரசு அனுமதி அளித்துள்ளது. முத்ரா கடன் மீதான 10 லட்சம் ரூபாய் உச்ச வரம்பு, 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டுள்ளதால், சிறு வணிகர்கள் அதிகார மேம்பாடு அடைந்துள்ளனர். சிறு தொழில் துறையினர், தங்களுக்குத் தேவையான இயந்திரங்கள், மற்றும் உபகரணங்களை வாங்கிக் கொள்ள, உத்தரவாதம் ஏதும் தராமல், கடன் பெறப் புதிய

100 *நாள் சாதனை 2 (7)*

திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஏஞ்சல் முதலீட்டாளர்களிடம் இருந்து, ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் பெறக் கூடிய முதலீடு மீதான, ஏஞ்சல் வரி ரத்து செய்யப் பட்டதால், நாட்டின் **ஸ்டார்ட்-அப் சூழல்** புதிய உத்வேகம் பெற்றுள்ளது. இந்தியாவின் விண்வெளித் துறையில் வளர்ச்சியைத்

தூண்டும் வகையில், இத்துறையைச் சேர்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கான 1000 கோடி ரூபாய் **மூலதன நிதி** ஒன்றை, அரசு உருவாக்கி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

----------------------------

*அமைச்சரவை 1 (13)*

**ஒரே நாடு-ஒரே தேர்தல்** என்னும் கருத்தை ஆராய்வதற்காக, முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையில் அமைக்கப்பட்ட, உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை, அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அரசியல் கட்சிகள், மற்றும், நிபுணர்கள் உட்பட, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டு, உயர்நிலைக் குழுவினர் தயாரித்துள்ள இந்த அறிக்கை, 2 கட்டங்களாக அமல்படுத்தப்படும் என்று, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் தெரிவித்தார். முதல்கட்டத்தில், மக்களவை, மற்றும், மாநில சட்டமன்றங்களுக்கான தேர்தல், ஒரே சமயத்தில் நடத்தப்படும் என்றும், பொதுத் தேர்தல் முடிந்த 100 நாட்களுக்குள், பஞ்சாயத்து, மற்றும் நகராட்சிகளுக்கான உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

----------------------------

*அமைச்சரவை* 2 (13)

நிலவுக்கான **சந்திரயான்-4** திட்டத்திற்கும், **வெள்ளி** கிரகத்திற்கான, **வீனஸ் ஆர்பிட்டர்** திட்டத்திற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. சந்திரயான்-4 திட்டத்தின் போது, நிலவில் தரையிறங்கும் விண்கலம், மீண்டும் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பும் வகையில் தொழில்நுட்பம் அமையும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

நடப்பாண்டு ராபி பருவத்தின் போது, **பாஸ்பேட், மற்றும் பொட்டாஷ்** உரங்களுக்கு, **நுண்ணூட்டச் சத்து** அடிப்படையில், மானியம் வழங்கவும்

மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் அரசுக்கு 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும் என்று அமைச்சர் தெரிவித்தார். விவசாயிகளுக்கான **பிரதமரின் வருமானப் பாதுகாப்புத் திட்டத்தைத்** தொடரவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

*அமைச்சரவை 3 (10)*

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், பழங்குடி மக்கள் அதிகம் உள்ள கிராமங்களை, **உன்னத** கிராமங்களாக மேம்படுத்துவதற்கான, **79 ஆயிரம் கோடி ரூபாய் திட்டத்திற்கும்**, மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இதுஅல்லாது, உயிரி தொழில்நுட்பத் துறையில், ஆராய்ச்சி, புதுமையாக்கம், மற்றும், தொழில் முனைவை ஊக்குவிக்க, புதிய திட்டம் கொண்டு வரவும், Animation, Visual Effects உள்ளிட்ட துறைகளுக்கு, **தேசிய செவ்வியல் மையம்** ஒன்றை அமைக்கவும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

-----------------------------

*புதுச்சேரி-பந்த் 1 (17)*

புதுச்சேரியில், மின் கட்டண உயர்வை திரும்பப் பெறக் கோரியும், ப்ரீ பெய்ட் மீட்டர் திட்டம், மற்றும், மின் துறை தனியார்மய முயற்சிகளை கைவிடக் கோரியும், இண்டியா கூட்டணி கட்சிகள் சார்பில், இன்று நடைபெற்ற முழு அடைப்பு போராட்டம் காரணமாக,நேரு வீதி உள்ளிட்ட முக்கிய சந்தைப் பகுதிகளில், பெரும்பாலான கடைகள், மற்றும், வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டு இருந்தன. தனியார் பேருந்துகள், ஆட்டோக்கள், மற்றும், டெம்போக்கள் பெரும்பாலும் இயங்கவில்லை என்றாலும், ஒருசில அரசுப் பேருந்துகள், போலீஸ் பாதுகாப்புடன்

இயக்கப்பட்டன. பந்த் போராட்டம் காரணமாக, அரசு மற்றும் தனியார் பள்ளிகளில், 1 முதல், 8ஆம் வகுப்பு வரை, விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது. அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில், 500க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். முழு அடைப்பின் போது, பிரதேச காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வைத்திலிங்கம், முன்னாள் முதலமைச்சர் திரு. நாராயணசாமி, மாநில திமுக அமைப்பாளர் திரு.சிவா, சிபிஐ மாநில செயலர் திரு. சலீம் ஆகியோர் உட்பட, ஏராளமான இண்டியா

*புதுச்சேரி-பந்த் 2 (3)*

கூட்டணி தொண்டர்களும், நிர்வாகிகளும், வெங்கடசுப்பா ரெட்டியார் சிலை அருகே, சாலை மறியலில் ஈடுபட்டதால், நூற்றுக்கும் மேற்பட்ட இண்டியா கூட்டணி கட்சியினரை போலீசார் கைது செய்தனர்.

----------------------------

*புதுச்சேரி-புகையிலை* (12)

தேசிய சுகாதார இயக்கம் மூலமான, தேசிய புகையிலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ், புதுச்சேரியில் வரும் 23ஆம் தேதி தொடங்கி, 2 மாதங்களுக்கு நடைபெற உள்ள, **புகையிலை இல்லா இளைஞர்கள் -** விழிப்புணர்வு பிரச்சாரம் பற்றிய முதல்கட்ட ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. துணை ஆட்சியர் திரு. சோம சேகர், மாநில புகையிலைக் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் வெங்கடேஷ் மற்றும் சம்பந்தப்பட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். **புகையிலை இல்லா இளைஞர்கள்** பிரச்சாரத்தில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பேரணிகள், சுவர் விளம்பரங்கள், மற்றும், பிரபல நட்சத்திரங்களின் விழிப்புணர்வு குறும்படங்கள் இடம்பெற உள்ளன.

----------------------------

*ஜம்மு-காஷ்மீர் (5)*

ஜம்மு-காஷ்மீரில், 7 மாவட்டங்களுக்கு உட்பட்ட 24 தொகுதிகளில், முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடையே இன்று நடைபெற்று வருகிறது. இரவு 7 மணி வரை நடைபெறும் வாக்குப் பதிவில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி, 50.65 சதவிகித வாக்குகள் பதிவாகி இருந்தன.

----------------------------

*விளையாட்டு-மாண்டவியா (19)*

அடித்தட்டு நிலையில் விளையாட்டுத் திறமைகளை கண்டறியவும், விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி பயிற்சி அளிக்கவும், அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார். இத்தகைய முழுமையான அணுகுமுறையினால், எந்தவொரு பின்னணியைச் சேர்ந்தவர்களும், விளையாட்டுத் துறையில் சிறப்படைந்து, நாட்டின் வெற்றிக்கு பங்களிக்க முடியும் என்று அவர் இன்று புதுடெல்லியில், **தேசிய ஊக்கமருந்து தடுப்பு ஏஜென்சியின்** கருத்தரங்கில் பேசுகையில் கூறினார். விளையாட்டுத் துறையில் ஊக்கமருந்துகளின் பயன்பாட்டை தடுப்பதற்கான விதிமுறைகள் குறித்து, **மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கும்** பயிற்சி அளிக்க, இந்த அமைப்பினர் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதுகுறித்து மாணவர்களுக்கு பாடத் திட்டம் தயாரிக்க, மத்திய கல்வி அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் இறுதியாகி இருப்பதாகவும் அவர் கூறினார். மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு தேவையான உள்கட்டமைப்பு,மற்றும், பயிற்சி வசதிகளை உருவாக்க, அரசு, சுமார் 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருப்பதாக, அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

----------------------------

ஆராய்ச்சி, மற்றும் அபிவிருத்திப் பணிகளில், பெண்களின் பங்கேற்பு அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

பூவுலகை பாதுகாக்க, புரட்சிகரமான மாற்றங்களும், கூட்டு முயற்சிகளும் தேவை என்று, குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜெக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

ஒரே நாடு-ஒரே தேர்தல் என்னும் கருத்தை ஆராய்ந்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை, மத்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

புதுச்சேரியில் இன்று, இண்டியா கூட்டணிக் கட்சிகளின் பந்த் போராட்டம் காரணமாக, பெரும்பாலான கடைகள் மூடப்பட்டு இருந்தன. பெரும்பாலான வாகனங்கள் ஓடவில்லை.